# ஒருநூறு கண்டு காலத்தை வெல்க! இருநூறு கொண்டு இமயத்தை வெல்க!




டாக்டர்
எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி.,
மேனாள் ஒன்றிய
இணையமைச்சர்



பூவின் மென்மை
பொய்கையின் தண்மை
நீரின் சாயல்
நெருப்பின் நிமிர்ச்சி
காற்றின் வருடல்
களிற்றின் பிளிறல்
நிலத்தின் பொறுமை
மலையின் பெருமை
வானின் உயர்ச்சி
வாலிப எழுச்சி
தாய்மை உணர்ச்சி
தந்தையின் மகிழ்ச்சி இவை
அனைத்தின் புணர்ச்சி
**அருமைத் தலைவர்**
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்**
**என்னும்**
**இரும்பு மனிதர்க்கு**
**இன்று பிறந்தநாள்!**

கரும்பு மனங்கொண்ட
அந்தக்
கட்டித் தங்கத்தை
விரும்பு மனங்களின்
வீடுகள் தோறும் இன்று
விழா நாள்!

**அரும்புகள் முதல்**
**ஆடி முடித்த**
**நரம்புகள் வரை**
**நயந்து போற்றி**
**வாழ்த்திப் பூரிக்கும்**
**வண்ணத் திருநாள்!**

நந்தமது குலம் செய்த
நற்றவத்தின் பயனாகி
சிந்தை மனம் செயலெல்லாம்
சீர்திருத்த மயமாகி
சுழல்கின்ற புவியைப்போல்
சுற்றுவதில் சுயமாகி

வாழத் துடிப்பவரின்
வாழ்வுக்கு வரமாகி
ஏழைக் கனவுகளில்
ஏழு நிறமாகி

இளைய தலைமுறைக்கு
ஏற்புடைய உரமாகி
அண்ணாந்து பார்ப்போர்க்கு
ஆண்டவன் கரமாகி

அகமாகிப் புறமாகி
ஆன்மாவின் சுகமாகி
ஆனந்த வெள்ளத்தின்
அலையாகிக் கலையாகி

ஆட்சி பீடத்தில்
அசைக்கவொணா நிலையாகி
இந்திய அரசியலில்
இணையற்ற தலையாகி
எழுந்து நிற்கும்
எங்கள் தளபதிக்கு...
இன்று பிறந்த நாள்!

மாநில உரிமைகளை
மன்றாடிப் பெறுவதிலும்
மக்களின் உணர்வுகளை
மதித்து நடப்பதிலும்

மானக் கொதிப்புடைய
மன்னனாய் ஜொலிப்பதிலும்
மாற்றார் மனங்கொண்ட
மமகாரம் அழிப்பதிலும்

அனைவருக்குமான
அதிகாரம் அளிப்பதிலும்
திசைகளை அதிர்விக்கும்
திராவிடம் காப்பதிலும்

**முன்களத் தலைவராய்**
**முன்நிற்கும் அவருக்கு**
**உலகத் தமிழினமே**
**உவந்து உவந்து**
**வாழ்த்திசைக்கிறது இன்று.**

உலகினுக்கே அறிவுரைகள்
சொல்லப் பிறந்தவன் வள்ளுவன்!
அதுபோல
காலங் காலமாய்க்
களமாடி நம்மைக்
கவிழ்க்க நினைக்கும்
ஜென்மப் பகைவர்களை
வெல்லப் பிறந்தவன் நீ..
என்று
துள்ளிப் பிறந்த
வார்த்தைகளைத் தூவி
வாழ்த்துகிறார்கள்
உலகெங்கும் உள்ள
உண்மைத் தமிழர்கள்!

'தென்றலைத் தீண்டியதில்லை.
தீயைத் தாண்டி இருக்கிறேன்'
என்று
அக்கினி வார்த்தைகளில்
அகவாழ்வு பேசிய
புலமைச் செல்வர்
நம் முத்தமிழறிஞரின் புத்திரர்,

அறமற்ற அரசியல் தாக்குதல்கள்
அனைத்தையும்
அலட்சியமாய் எதிர்கொண்டு
அகிலத்தின் கவனத்தில்
அரசோச்சுகிறார் இப்போது!

நரம்பில்லா நாக்குகளின்
வரம்பில்லாப் பேச்சுகளை
ஒரு தூசைப்போலத்
துடைத்தெறிந்துவிட்டுத்
தொண்டுகள் நோக்கித்
தூய பயணம் மேற்கொள்ளும்
துணிவுடைச் செம்மலாய்
தோன்றி மின்னுகிறார்
தற்போது!

முதிரா வயதில்
முறுக்கேறிய பருவத்தில்
எவ்வண்ணம் உழைத்தாரோ..
அவ்வண்ணமே இன்றும்
பந்தயக் குதிரையாய்ப்
பாய்கிறார் தளபதி!
'என் கடன் பணிசெய்து
கிடப்பதே' என்று
பற்றற்ற
பரமநிலையில் நின்று...
அன்னைத் தமிழகத்திற்கு
அணிசெய்து கொண்டிருக்கிறார்
அவர்!

தனக்கு
வாக்களித்தவர்களுக்கும்
வாக்களிக்காதவர்களுக்கும்
ஒத்துரிமை கொடுத்து
உரக்கச் சிந்தித்து
உதவிக்கரம் நீட்டி
உள்ளொளி காட்டும் அவரை
உத்தமத் தலைவர் என்று
உரைசெய்து மகிழ்கிறது
தமிழுலகம்!

முகிலைக் கண்டால்
தோகை விரித்தாடும்
மயிலைப் போல,
மின்னலைக் கண்டால்
முகைவிரித்து மணக்கும்
தாழையைப் போல,
அவரைக் கண்டாலே
ஆடவர் உலகம்
ஆர்ப்பரித்து மகிழ்கிறது!

மாதரார் திலகங்கள்
மகனைக் காண்பதுபோல்,
அன்பிலே தழைத்த
அண்ணனைப் பார்ப்பதுபோல்,
ஆயிரம் பூக்களை
அள்ளிச் சொரிகிறார்கள்!

பள்ளிப் பிள்ளைகளோ
பாசப் புறாக்களாய்ப்
பறந்தவர் கைகளைப்
பற்றிக் கொள்கிறார்கள்!
சற்று நடந்தாலும்
சாலைகள் எல்லாம்
கற்றவர் சபையாய்க்
கனத்துப் போகிறது!
உற்சவர் வரவாய்
உயர்ந்து போகிறது!
அழகழகு மொழியில்
'அப்பாவென்' றழைக்கும்
மழலைகளைக் கண்டு
மாற்றார் நெஞ்சம்
மருண்டு போகிறது!
போற்றார் நெஞ்சம்
இருண்டு போகிறது!

**ஒற்றை மனிதனா**
**ஊர்வலம் வருகிறான்..**
**உலக மனிதனாய்**
**உலாவரும் ஒருவன்**
**நிலாவைப் போல**
**நிமிர்ந்து வருகிறான்!**
**கனாவைப் போலக்**
**கடைத்தெரு வருகிறான்!**

நம்பிக்கை நாயகன்
நடந்து வருகிறான்!
நல்லவன் ஒருவன்
நமக்காய் வருகிறான்!
வல்லவன் ஒருவன்
வணங்கி வருகிறான்!

பொல்லார் பலரும்
புழுங்கிக் கிடக்கையில்
எல்லாம் செய்பவன்
எமைத்தேடி வருகிறான்..
என்றே அனைவரும்
இதய உணர்வோடு
உதய சூரியனைத்
தரிசிக்க வருகிறார்!

**தமிழகத்து வீதிகளில்**
**இந்தத் தரிசனம்தான்**
**இடைவெளியே இல்லாமல்**
**எங்கெங்கும் கிடைக்கிறது!**
**மக்களின் தலைவன்**
**மகேசன் ஆவதைத்**
**திக்குகள் உணர்ந்து**
**திணறிப் போகிறது!**

ஹைட்ரஜன் இரண்டு மடங்கு
ஆக்ஸிஜன் ஒரு மடங்கு
இவை இரண்டும்
கூடிக் கலந்தால்
குடிநீர் கிடைக்கும்!
வேகம் ஒரு மடங்கு
விவேகம் இரு மடங்கு
இவை இரண்டும்
கூடிக் கலந்து
குடியரசான தளபதியைத்
தேடிக் கலந்து
தித்தித்து மகிழ்கிறதுநம்
தேமதுரத் தமிழ்நாடு!

ஒரு கண்ணில் வெண்ணெய்
மறு கண்ணில் சுண்ணாம்பு
வைக்கின்ற கலையில்
வல்லவர்கள் நம்மை
வஞ்சிக்கிறார்கள்,
வடக்கே இருந்து!

நிதி வழங்க வேண்டியவர்கள்
நேர்மைப் பஞ்சத்தால்
நிதியில்லை என்று
நெருப்பள்ளிக் கொட்டிவிட்டு
'எரிகிறதா' என்று
எட்டிப் பார்க்கிறார்கள்!

மும்மொழித் திட்டத்தின்
மூலம்நம் மூலத்தைச்
சேதாரம் செய்யத்
தீமூட்டிப் பார்க்கிறார்கள்!

'அஞ்சுவார்; இலையென்றால்
அகத்தூது விட்டுக்
கெஞ்சுவார்' என்று
நினைத்து விட்டார்கள்,
கெடுமதியாளர்கள்!

அஞ்சாமைக்கே இலக்கணம்
ஆகிய கலைஞரை
அஞ்சுகத்தாய் பெற்றார்!
அந்த
அஞ்சுகத்தாய் பேரன்
அஞ்சுவதற்கே அஞ்சுவான்!
அஞ்சாமைக்கு அஞ்சுவானா?

ஆயிரம் யானைகள்
அமரிடை வென்றவன்
வாயினைப் பொத்தி
வாடிப்போய்க் கெஞ்சுவானா!
தொண்டுக்குத் தடைவந்தால்
துவண்டுபோய்த் துஞ்சுவானா?

'பத்தாயிரம் கோடியைப்
பங்களித்தாலும்
மும்மொழிக் கோப்பில்
மு.க. ஸ்டாலின் கையொப்பம்
கிடைக்காது' என்று
சீறிய தளபதியின்
சூரிய முழக்கத்தில்
ஆரியப் பிடிவாதம்
அரண்டுபோய் நிற்கிறது!

'ஒரு முதல்வரைத்
தீண்டுகிறோம்' என்று
முதலில் எளிதாய் நினைத்தவர்கள்
'எரிமலையின் புதல்வரைத்
தீண்டுகிறோம்' என்பதைத்
தாமதமாய்ப் புரிந்துகொண்டு
தவித்துப்போய் நிற்கிறார்கள்!

அண்டை மாநிலங்களின்
மண்டை ஓட்டிலே
இந்தி பானத்தை நிரப்பி
இனிதெனக் கொடுத்து விட்டோம்!
அவர்களும் அதனை
அமுதென நம்பி
அழியத் தொடங்கி விட்டார்கள்!

இவர்கள் மட்டும்
கபாலம் முழுக்கக்
கண்களை வைத்துக் கொண்டு
நம் கபட நாடகத்தைக்
காட்டிக் கொடுக்கிறார்களே
என்ற கவலை,
கரையானாய்
அரித்துத் தின்கிறது
அவர்களை!

நமக்கு மட்டுமல்ல
நாட்டுக்கும் சேர்த்துக்
குரல் கொடுப்பதுதான்
திராவிட மாடல் என்று
இமயக் காதுகளை
இங்கிருந்தே துளைக்கிறார்
எம் தளபதி!

காற்றைப் பிழிந்து
சாறெடுப்பதும்
கனலைப் பிழிந்து
நீரெடுப்பதும்
கட்டுக்குள் வராத
கலை!
அதையும் இப்போது
கற்றுக் கொண்டு விட்டார்
நம் தளபதி!

**தன்னைப் பிழிந்து**
**தமிழக மக்களின்**
**வாழ்வுச் சுவைக்கு**
**வழிசெய்யத் துணிந்தவர் முன்,**
**சுயநலக் காரர்களின்**
**சூழ்ச்சி பலிக்காது!**
**ஆணவப் பேச்சு**
**அரசியலும் ஜெயிக்காது!**

வேற்றுமையில் ஒற்றுமை
என்னும்
வானவில்லின் வர்ணஜாலமே
இந்தியாவின் உயிர்நாதம்!
அந்த நாதத்தைத் தூக்கி
நடுக்கடலில் எறிந்துவிட்டு
வேதத்தை ஓதும்
சாத்தான்களுக்கு
விவேகத்தை யார் ஓதுவது?
காலமா களமா என்று
கர்ஜிக்கத் தொடங்கி விட்டன
தமிழ்நாட்டு மேடைகள்!

உள்ளத்தே உண்மையொளி
உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
என்றான்
பாட்டரசன் பாரதி.
உள்ளும் புறமும்
ஒளிவெள்ளம் தேக்கி
நல்லாட்சி படைத்துவரும்
நாயகர்நம் தளபதிக்கு
எதிர்கால வெளிச்சம்
ஏகமாய்த் தெரிகிறது!

**'உதிரிகள் எல்லாம்**
**ஒன்றாய்க் கூடி**
**எதிரிகள் ஆகி**
**எதிர்த்த போதினும்,**
**ஊழிக் காற்றில்**
**உமிக் கூட்டமாகிப்**
**பறக்கப் போகிறது**
**பகைக்கூட்டம்' என்பதை**
**பாரதத் திருநாடு**
**பார்க்கத்தான் போகிறது!**

ஓய்வு என்பதே
ஒவ்வாமை ஆக்கி
உழைப்பு என்பதே
உயிரென ஊக்கி
ஒவ்வொரு நொடியும்
உழைத்துவரும் நம்
உன்னதத் தலைவரை
வெற்றித் திருமகள்
விடவே மாட்டாள்!
எதிரிகள் கண்ணில்அவள்
படவே மாட்டாள்!

வானமாய் விரிந்து
ஞானமாய்ப் பரந்து
நிதானமாய் வளர்ந்து
நித்திலக் குன்றமாய்
நிமிர்ந்து நிற்கும்
தளபதி
கால்வைத்தால் போதும்
களர்நிலமும் பூப்பூக்கும்!

பாலைவனத்திலும்
பாலூறித் தேன்பொழியும்!
மானம் மிகுந்த
மரபணுக்களின்
சேர்க்கையில் பிறந்த
சிங்கக் குருளைக்கு
இனிமேல்
எங்கும் வெற்றி
எதிலும் வெற்றிதான்!

அணுசக்தியை விடவும்
ஆற்றல் வாய்ந்த ஜனசக்தி
அவரின்
பின்னாலும் நிற்கிறது!
முன்னாலும் நிற்கிறது!

**கண்ணசைவில் சேனைகளைக்**
**களமிறக்கும் வித்தைகளைக்**
**கலைஞரிடம் கற்றவர்..**
**ஏழாவது முறையும்**
**ஏறுவார் அரியணை!**

மலர்கொய்தல் போல
மலைசாய்க்கும் துணிச்சல்
எய்தப் பெற்றவர்
இம்முறையும் வெல்வார்!
இருநூறு படியேறி
மகுடத்தைக் கொள்வார்!

கருத்தியல் புரட்சியின்
கனமான விளைவுகளை
இமயத்தின் நெற்றியில்
எழுதத்தான் போகிறது..
இருபத்தாறு!

உண்மைக்கு எதிராக
உற்பத்தி ஆகும்
ஒவ்வொரு எதிர்ப்பும்
கர்ப்பத்திலேயே
கலைந்து போகும்
கோலத்தைக்
காணத்தான் போகிறது
காலம்!

ஆகாயம் அளாவும்
ஆணவக் கூச்சலும்
அவதூறு பாய்ச்சலும்
ஆயுளே இல்லாமல்
அழிந்து போகும்
அவலத்தை
நோக்கத்தான் போகிறது,
ஞாலம்!

கட்டுக் குலையாமல்
காப்பாற்றப் பட்ட
சனாதனச் சழக்குகளை
அழுக்குத் துவைப்பதுபோல்
அடித்துத் துவைக்கும்
அருமைத் தலைவா..

**அடுத்து வரப்போகும்**
**ஆட்சியின் நீட்சியில்**
**அரியாசனம் உனக்குத்தான்**
**என்பதை**
**அறியாதவர் யாரிங்கே?**

அறியாமையில் சிக்கிய
அரைவேக்காடுகளுக்கு
அறிவிக்கவும் புரிவிக்கவும்தான்
தேர்தல்!
புரிந்தவர்கள் இப்போதே
புகழ்ப்பரணி பாடத்
தயாராகி விட்டோம்
தலைவா!

தோல்விகளைப் புறந்தள்ளித்
தொடர்வெற்றி பெற்றவனே!
உன்
ஆள்வினை உடைமைக்கு
அடுத்துவரும் தேர்தல்
அகச்சான்றாய் நின்று
அலங்கரிக்கப் போகிறது
திராவிட வரலாற்றை!
இது ஆரூடம் அல்ல
அரசியல் சித்தாந்தம்!

விழுங்கத் துடிக்கும்
வேங்கைகள் வாயில்
வலியப்போய் விழுவதற்கு..
தமிழ்நாடு ஒன்றும்
வெள்ளாட்டுக் கூட்டமல்ல
பகுத்தறிவுப் புலிகளின்
பாசறை!

இங்கே பசப்பு மொழிகளும்
எடுபடாது!
திணிப்பு மொழிகளும்
நடையிடாது!
இனிப்புப் பொய்களும்
முடிசூடாது!

**நேற்றைக்கும் இன்றைக்கும்**
**எதிர்காலத் தலைமுறைக்கும்**
**இங்கே**
**நீதான் தலைவன்!**
**நீயேதான் முதல்வன்!**
**ஓங்கி உலகளந்த**
**ஒண்டமிழ் கொண்டு**
**உன்னை வாழ்த்துகிறேன்**
**உன் அடியேன்:**

**ஒருநூறு கண்டு**
**உலகத்தை வெல்க நீ!**
**இருநூறு கொண்டு**
**இமயத்தை வெல்க நீ!**